# *யேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் தவக்கால இறைத்தியான வழிபாடுகளும் குணமாக்கல் வழிபாடுகளும்.*

2013.02.13 –2013.04.01


**அருட்பணி.லோறன்ஸ் அடிகளார்**
இறை தியான இல்லம்
யாழ்ப்பாணம்


01.

**அக்கினி மயமே பரிசுத்த ஆவியே**
எரி தணலாய் எழும்மிடுவீர் - அப்பா நிரப்பிடுவீர்

அணைப்பவரே ஆறுதல் தருபவரே
அதிசயம் செய்பவரே -எங்கள் துணை நிரே

எந்தன் உள்ளம் பாழாய் போனதையா
புதிய இதயத்தையே என்னுள் மலரச் செய்வீர்

அபிஷேக முத்திரை ஆனவரே
சாட்சியாய் வாழ்ந்திடவே - அன்பாய் வழி நடத்தும்

நோய்களெல்லாம் உடனே தீருமையா
அரிய வரங்களையே -எமக்கு தாருமையா

கண்ணீர் சிந்தும் எம்மை பாருமையா
தாகம் தீர்த்திடவே - ஊற்றாய் பாய்ந்திடுமே

பேய்களெல்லாம் வீழ்ந்து ஓடுமையா
பயங்கள் நீங்கிடவே - நிறைவாய் வாழ்வோமே


தொடர்பு: அருட்பணி. அ.பெ.பெனற்
யேர்மன் ஆன்மீகப்பணியக இயக்குனர்
Tel: 02014397602
**www.tamilcatholic.de**


02.

**அழைக்கிறார் இயேசு ஆண்டவர்**
ஆவலாய் நாம் செல்லுவோம் (2)
அவர் பலியினில் கலந்திட
அவர் ஒளியினில் நடந்திட - 2
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட இந்நாளிலே

தேடியே தேவன் வருகிறார்
தன்னையே நாளும் தருகிறார்
தோள்களில் நம்மைத் தாங்குவார்
துயரினில் அவர் தேற்றுவார்
சுமைகளை சுகங்களாக மாற்றுவார்
வளமுடன் வாழும் வழியைக் காட்டுவார் (2)
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

அன்பினால் உலகை ஆளுவார்
ஆவியால் நம்மை நிரப்புவார்
அமைதியை என்றும் அருளுவார்
ஆனந்தம் நெஞ்சில் பொழிகுவார்
விடியலின் கீதமாக முழங்குவார்
விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார் (2)
வாருங்கள் ...

03.

**அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில் இருக்கிறார்**
அற்புதங்கள் செய்கிறவர் என்றும்
நமக்குள் வசிக்கிறார்

தண்ணீரை ரத்தமாய் மாற்றினார் அதிசயம்(2)
வெறும் தண்ணீரை திராட்சை ரசமாய்
மாற்றினார் அதிசயம்

செங்கடலை இரண்டாக பிரித்திட்டார் அதிசயம்(2)
புயல் காற்றைத் தம் ஆணையாலே
அடக்கினார் அதிசயம்

பாவியான என்னையுமே மாற்றினார் அதிசயம் – இந்த
ஏழை என் மீது நேசக்கரம் நீட்டினார் அதிசயம்

குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம்(2)
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார் அதிசயம்

04.

**அனைத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவரே**
நீர் நினைத்தது ஒரு நாளும் தடை படாதையா

நீர் முடிவெடுத்தால் யார்தான் மாற்றமுடியும்
எனக்கென முன்குறித்த எதையுமே
எப்படியும் நிறைவேற்றி முடித்திடுவீர்
உமக்கே ஆராதனை உயிருள்ள நாளெல்லாம்

நான் எம்மாத்திரம் ஒரு பொருட்டாய் எண்ணுவதற்கு
காலைதோறும் கண்ணோக்கிப் பார்க்கிறீர்
நிமிடந்தோறும் விசாரித்து மகிழ்கிறீர்

என்னைப் புடமிட்டால் பொன்னாக துலங்கிவிடுவேன்
நான் போகும் பாதைகளை அறிந்தவரே
உந்தன் சொல்லை உணவு போலக் காத்துக் கொண்டேன்

நான் எண்ணிமுடியா அதிசயம் செய்பவரே
காயப்படுத்தி கட்டுப்போடும் கர்த்தரே என்னை
அடித்தாலும் அணைக்கின்ற அன்பரே

என் மீட்பரே உயிரோடு இருப்பவரே
இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பதை
என் கண்கள் தானே அந்நாளில் காணுமே
எப்போது வருவீரையா - என் உள்ளம் ஏங்குதையா

05.

**ஆனந்தம் ஆனந்தம்**
என் நெஞ்சில் ஆனந்தம்
இயேசு எனக்குள் வந்தார் இன்று
புதிய வாழ்வு தந்தார்

நன்றி நன்றி நன்றி என்று நான் பாடுவேன்
நன்றி நன்றி நன்றி என்று நான் பாடுவேன்

அல்லேலுயா அல்லேலுயா நான் பாடுவேன்
ஆடிப்பாடி ஆர்ப்பரித்து நான் போற்றுவேன்

பாவப்பிடியில் வாழ்ந்த நாட்கள்
போதும் போதுமையா
எனக்காய் இயேசு சிந்திய இரத்தம்
மீட்பைத் தந்ததையா

அழுது வடிந்த துயர நாட்கள்
ஒழிந்து போனதையா
அன்பர் இயேசுவின் அணைக்கும் கரங்கள்
ஆறுதல் தந்ததையா

06.

**ஆளுகை செய்யும் ஆவியானவரே**

பலியாய் தந்தேன் பரிசுத்தமானவரே
ஆவியானவரே – என்  ஆற்றலானவரே

நினைவெல்லாம் உமதாகணும்
பேச்செல்லாம் உமதாகணும்
நாள் முழுதும் வழிநடத்தும்
உம் விருப்பம் செயல்படுத்தும்

அதிசயம் செய்பவரே  -  ஆறுதல் நாயகனே
காயம் கட்டும் கர்த்தாவே
கண்ணீரெல்லாம் துடைப்பவரே – என்

புதிதாக்கும் பரிசுத்தரே
புதுப்படைப்பாய் மாற்றுமையா
உடைத்துவிடும் உருமாற்றும்
பண்படுத்தும் பயன்படுத்தும்

அப்பாவை அறிந்திடணும்
வெளிப்பாடு தாருமையா
மனக்கண்கள் ஒளி பெறணும்
மகிமையின் அச்சாரமே

உள்ளான மனிதனை
வல்லமையாய் பலப்படுத்தும்
அன்பு ஒன்றே ஆணிவேராய்
அடித்தளமாய் அமைந்திடணும்

கிறிஸ்துவின் அன்பின் ஆழம்
அகலம் உயரம் உணரணுமே
நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே

சங்கீதம் கீர்த்தனையால்
பிறரோடு பேசணுமே
எந்நேரமும் எப்போதுமே
நன்றிப் பலி செலுத்தணுமே

போர் செய்யும் ஆயுதமாய்
உம் வசனம் தாருமையா
எல்லாவித ஜெபத்தோடு
ஆவியிலே மன்றாடனும்

என் இதய பலகையிலே
எழுதிடும் உம் வார்த்தை
மையாலல்ல உம் ஆவியாலே
எழுதிடுமே ஏங்குகின்றேன்

அரண்களை தகர்த்தெறியும் – என்
அன்பின் வல்லவரே
எதிரான எண்ணங்களை
கீழ்படுத்தும் சிறைப்படுத்தும்

07.

**இயேசு ஆண்டவர் பெரியவர்**

அவர் பெரியன காணச் செய்வார்
இயேசு ஆண்டவர் அற்புதர் - உனக்கு அதிசயம் செய்திடுவார்
அல்லேலூயா ஆமென் அல்லேலுயா  2

தீமைகள் உன்னை அணுகாது
துன்பங்கள் உன்னை நெருங்காது  2
கலங்கிட வேண்டாம் பயப்பிடவேண்டாம்
காக்கின்ற தேவன் உன்னுடனே
அல்லேலூயா ஆமென் அல்லேலுயா  2

ஆண்டவர்  உன்னை நடத்திடுவார்
வரண்ட சுழலில் நிறைவளிப்பார்   2
வளமையாக்குவார் மேன்மைப்படுத்துவார்
வற்றாத நீர் ஊற்றாக பெருகச்செய்வார் 2
அல்லேலூயா ஆமென் அல்லேலுயா  2

உன்னோடு இருப்பவர் நல்லவரே
நலங்களால் உன்னை நிரப்பிடுவார்  2
கண்ணீரெல்லாம் துடைத்திடுவார் உன்
கரங்கள் பிடித்து நடத்திடுவார்  2
அல்லேலூயா ஆமென் அல்லேலுயா  2

08.

**உனக்குள்ளே விசுவாசம் இருந்தால்**

எல்லாமே கைகூடுமே
உயிராக தேவனையே நினைத்தால்
உலகமும் பொய்யாகுமே
வல்லவரே நல்லவரே
அள்ளி அள்ளித் தருபவரே  2

நஞ்சைக் குடித்தாலும் தீங்கு இல்லையே
பாம்புகளைப் பிடித்தாலும் தீமை இல்லயே 2
விசுவாசம் இருந்தால் வெற்றி உனக்கே  2

நோய்கள் பேய்கள் ஓடிப் போகுமே
பிணியாளி நலமடைந்து குதிதிடுவான்
விசுவாசம் இருந்தால் வெற்றி உனக்கே 2

வேதனைகள் துன்பங்கள் தொலைந்திடுமே
சமாதானம் சந்தோசம் வந்து சேருமே
விசுவாசம் இருந்தால் வெற்றி உனக்கே  2

எதிரி சாத்தானை முறிகடிப்பாய்
புதுமொழி பேசி நீ ஜெயம் பெறுவாய்
விசுவாசம் இருந்தால் வெற்றி உனக்கே  2

09.

**உகந்த காணிக்கையாய்**

ஒப்புக் கொடுத்தேனையா
சுகந்த வாசனையாய்  முகர்ந்து மகிழுமையா

தகப்பனே உம் பீடத்தில்  தகனபலியானேன்
அக்கினி இறக்கிவிடும்
முற்றிலும் எரித்துவிடும்  – உகந்த

வேண்டாத பலவீனங்கள்
ஆண்டவா முன் வைக்கின்றேன்
மீண்டும் தலை தூக்காமல்
மாண்டு மடியட்டுமே

கண்கள் தூய்மையாக்கும்
கர்த்தா உமைப் பார்க்கணும் – என்
காதுகள் திறந்தருளும்
கர்த்தர் உம குரல் கேட்கணும் – என்

அப்பா உம சமூகத்தில்
ஆர்வமாய் வந்தேனையா
தப்பாமல் வனைந்து கொள்ளும்
உப்பாக பயன்படுத்தும்

10.
**என்னை மாற்றி உருவாக்கும் என் யேசுவே**
மனம் மாறி உனில் வாழ வரம் வேண்டுமே 2
தெய்வமே என் தெய்வமே 2

தேர்ந்து கொண்ட உன் பிள்ளை நான்
சோர்ந்து போகலாமோ 2
என் பாவ சேற்றுக்குள் விழுந்த என்னை
உன் தூய ரத்தம் கொண்டு கழுவுமப்பா 2

தேடி வந்தேன் உந்தன் இல்லம்
வாடி நானும் திரும்ப மாட்டேன் 2
திசை மாறி தடுமாறித் தவிக்கின்றேன்
துணை வேண்டும் உம் திருக்கரங்களப்பா 2

11.
**எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே..**
இந்நாளில் உம் சித்தம் போல் நடத்திச் செல்லுமையா

ஆவியானவரே ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே - 2

எப்படி நான் ஜெபிக்கவேண்டும்
எதற்காக ஜெபிக்க வேண்டும்
கற்றுத் தாரும் ஆவியானவரே - 2
வேத வசனம் புரிந்து கொண்டு
விளக்கங்களை அறிந்திட
வெளிச்சம் தாரும் ஆவியானவரே - 2

கவலை கண்ணீர் மறக்கணும்
கர்த்தரையே நோக்கணும்
கற்றுத்தாரும் ஆவியானவரே - 2
செய்த நன்மை நினைக்கணும்
நன்றியோடு துதிக்கணும்
சொல்லித் தாரும் ஆவியானவரே - 2

எங்கு செல்ல வேண்டும்
என்ன சொல்ல வேண்டும்
வழி நடத்தும் ஆவியானவரே - 2
உம் விருப்பம் இல்லாத
இடங்களுக்குச் செல்லாமல்
தடுத்து நிறுத்தும் ஆவியானவரே - 2

எதிரிகளின் சூழ்ச்சிகள்
சாத்தானின் தீக்கணைகள்
எதிர்த்து நிற்க பெலன் வேண்டுமே
உடல் சோர்வு அசதிகள்
பெலவீனங்கள் நீங்கி
உற்சாகத்தால் நிரம்ப வேண்டுமே

12.
**சந்தோசம் பொங்குதே (2)**
சந்தோசம் என்னில் பொங்குதே - அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோசம் பொங்கி பொங்குதே

வழி தப்பி நான் திரிந்தேன் பாவ பழியதை
சுமந்தலைந்தேன்
அவர் அன்புக்குரலே அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம்நீங்கிற்றே

சத்துரு சோதித்திட தேவ உத்தரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே

13.
**தூய ஆவியே தேவ அக்கினியே 2**
எழுவீர் தேவா எழுவீர் - என் நெஞ்சில் வருவீரே

நிரப்பும் இப்போதே நிரப்பும்
தூய ஆவியே நிரப்பும் 2
காற்றுகள் உமக்கு கீழ்ப்படியும்
நெருப்புகள் உமது ஊழியனாம்
எங்களின் வீடுகளில் - தூய ஆவியே நிரப்பும்! 2

மாற்றும் இப்போதே மாற்றும்
பாவி என்னையும் மாற்றும்
நெருப்பாய் பூமியில் விழுந்திடுவாய்
வல்லமையாய் இங்கு இறங்கிடுவாய்
எங்கள் குடும்பங்களில் தூய ஆவியே நிரப்பும்

தேற்றும் இப்போதே தேற்றும்
திடமாய் எம்மையே தேற்றும்
ஊற்றாய் பொங்கி பாய்ந்திடுவாய்
உயிராய் எம்மில் உறைந்திடுவாய்
எங்கள் உள்ளங்களில் - தூய ஆவியே நிரப்பும்

14.
**நான் பாவிதான் ஆனாலும்**
நீர் இரத்தம் சிந்தினீர்
இன்று உம் பிள்ளை நான்
இயேசையா இன்று உம் பிள்ளை நான்

கல்வாரியின் மலை மீதிலே
உம் பாடுகள் எனக்காகத் தான் 2
உம் கை காலிலே காயமெல்லாம்
நான் செய்த பாவமையா 2

கன்னங்களில் வழிந்தோடிடும்
கண்ணீரும் எனக்காகத் தான் 2
உம் கைகளிலே வழிந்தோடிடும்
திரு இரத்தம் எனக்காகத் தான். 2

மூன்றாணியால் என் பாவங்கள்
சுமந்து தீர்த்தீரையா 2
மூன்றாம் நாளில் எனக்காகவே
உயிரோடு எழுந்தீரையா 2

15.

**வருகிறோம் வருகிறோம்**
தாகத்தோடு வருகிறோம்
ஆவியின் கனியொன்றே போதுமையா
ஜெபிக்கின்றோம் ஜெபிக்கின்றோம்
கண்ணீரோடு ஜெபிக்கின்றோம்
அக்கினியாம் ஆவியாரை ஊற்றுமையா

நான் என்னில் எப்பொழுதும் சாக வேண்டுமே
கிறிஸ்து என்னில் வளர வேண்டுமே
உன் நாமம் ஊரேல்லாம் கேட்க வேணுமே
ஐயா அது என் தாகமே

சவுல் என்னில் எப்பொழுதும் சாக வாணுமே
பவுலாய் நான் மாற வேணூமே
அன்பு அமைதி பரிவுள்ளம்
எனக்குத் தாருமே - ஐயா அது என் தாகமே

ஸ்தேவானாய் துன்பத்திலும் ஸ்துதிக்கவேணுமே
எதிரிக்காய் ஜெபிக்க வேணுமே
நம்மிக்கை நன்னயம் மகிழ்ச்சி தாருமே
ஐயா அது என் தாகம்

பேதுருவாய் இன்றே நான் எழும்ப வேணுமே
இறைவாக்கு உரைக்க வேணுமே
கனிவு பொறுமை தன்னடக்கம் எனக்குத் தாருமே
ஐயா அது என் தாகமே

16.

**வல்லமை தேவை தேவா வல்லமை தாரும் தேவா**
இன்றே தேவை தேவா இப்போ தாரும் தேவா

பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

மீட்கப்படும் நாளுக்கென்று -
முத்திரையான ஆவி தாரும்
பிதாவே என்று அழைக்க
புத்திர சுவிகாரம் ஈந்திடும்

மாம்சமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்கதரிசனம் சொல்வாரே

பெந்தகொஸ்தே நாளின் போல
பெரிதான முழக்கத்தோடு
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும்

17.

**விண்ணப்பத்தை கேட்பவரே - என்**
கண்ணீரை காண்பவரே
சுகம் தருபவரே ஸ்தோத்திரம் இயேசையா

உம்மால் கூடும் எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும் - ஐயா

மனதுருகி கரம் நீட்டி - அதிசயம் செய்பவரே - ஐயா

சித்தம் உண்டு சுத்தமாகு
என்று சொல்லி சுகமாக்கினீர் - ஐயா

என் நோய்களை சிலுவையிலே
சுமந்து தீர்த்தீரையா – ஐயா

குருடர்களை பார்க்கஸ் செய்தீர்
முடவர்களை நடக்கச்செய்தீர் - ஐயா

உம் காயத்தால் சுகமானேன்
ஒரு கோடி ஸ்தோத்திரம் –ஐயா

18.

**ஆசீர்வதியும் என்னை ஆசீர்வதியும்**
ஆசீர்வதியும் அப்பா ஆசீர்வதியும்
ஆசீர்வதியும் என்னை ஆசீர்வதியும்
ஆசீர்வதியும் அப்பா ஆசீர்வதியும்

அப்பா பிதாவே ஆசீர்வதியும்
அன்புள்ள பிதாவே ஆசீர்வதியும் 2
தித்திய பிதாவே ஆசீர்வதியும்
சத்திய பிதாவே ஆசீர்வதியும் 2

இயேசுக் கிறிஸ்துவே ஆசீர்வதியும்
இரட்சிக்கின்ற தெய்வமே ஆசீர்வதியும் 2
இம்மானுவேலே என்னை ஆசீர்வதியும்
கூட வருபவரே என்னை ஆசீர்வதியும் 2

நீதியின் ராஜாவே ஆசீர்வதியும்
நிர்மல ராஜாவே ஆசீர்வதியும் 2
இம்மானுவேலே என்னை ஆசீர்வதியும்
கூடவருபவரே என்னை ஆசீர்வதியும் 2

அன்பு மயம் ஆனவரே ஆசீர்வதியும்
சாந்த சற் குணரே ஆசீர்வதியும் 2
இரக்கத்தின் பிதாவே ஆசீர்வதியும்
எங்கள் நல்ல பிதாவே ஆசீர்வதியும் 2

மன்னிக்கும் தெய்வமே ஆசீர்வதியும்
குணமாக்கும் தெய்வமே ஆசீர்வதியும் 2
விடுவிக்கும் தெய்வமே ஆசீர்வதியும்
வெற்றி தரும் தெய்வமே ஆசீர்வதியும் 2
ஆசீர்வதியும் என்னை ஆசீர்வதியும் 4

19.

**அதிசயங்கள் செய்கின்றவர் - நம் அருகில் இருக்கின்றார்**
அற்புதங்கள் செய்கின்றவர்
என்றும் நமக்குள் வசிக்கின்றார்.

தண்ணீரை இரத்தமாய் மாற்றினார் அதிசயம் - எகிப்துத்
தண்ணீரை இரத்தமாய் மாற்றினார் அதிசயம். – வெறும்
தண்ணீரை திராட்சை இரசமாய் மாற்றினார் அதிசயம்

செங்கடலை இரண்டாகப் பிரித்திட்டார் அதிசயம்
புயற் காற்றைத் தம் ஆணையாலே அடக்கினார் அதிசயம்.

பாவியான என்னையும் உயர்த்தினார் அதிசயம்
ஏழை என் மீதும் நேசக் கரம் நீட்டினார் அதிசயம்

குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம்
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார் அதிசயம்.

**20.**

**என் பாவம் நினைந்து புலம்பி நான் அழுகின்றேன்**
கண்ணீரால் நிரம்பி உம் பாதம் நனைக்கின்றேன்
கூந்தலால் துடைக்கின்றேன் (2)
மன்னியும் தேவா என் பாவம் மன்னித்தருளும் (2)
(என் பாவம் நினைத்து .............)

அயலானின் சொத்தை நான் அபகரித்தேன்
அடுத்தவன் நாமத்தைப் பழுதாக்கினேன் (2)
பாவ அறிக்கை நான் செய்யவில்லை
பாவி உன் அன்பை மறந்தேன் ஐயா (2)
மன்னியும் தேவா என் பாவம் மன்னித்தருளும் (2)
(என் பாவம் நினைத்து ............ ).

ஆசை என் ஆன்மாவை அழிக்கின்றது
அனுதினம் தீமையை நினைக்கின்றது (2)
களவு பொய் காமம் என்னில் நிறைந்துள்ளது
பாவி உன் அன்பை மறந்தேன் ஐயா (2)
மன்னியும் தேவா என் பாவம் மன்னித்தருளும் (2)
(என் பாவம் நினைத்து .............)

**21.**

**தாய் உன்னை மறந்தாலும் உன்னை நான்**
மறப்பதில்லை உள்ளங்கையில் உன்னை
நான் பொறித்தேனே (2)
உயிரை உனக்காய் தந்தேனே

மன்னாவை உணவாய் உனக்குத் தந்தேன்
மேகமாய் உன்னோடு நடந்து வந்தேன்
பாறையில் தண்ணீராய் தாகம் தீர;த்தேன்
பாலைவன ஜீவியத்தில் பாதை தந்தேனே
தளராதே மனமே தளராதே (2)
உன்னை நான் தேர்ந்து கொண்டேன் (2)

என் சதை உனக்கே உணவாக்கினேன்
என் இரத்தம் உனக்கே பருகத்தந்தேன்
மண்மீது மனிதம் காக்க வந்தேன் மனிதா
நான் உனக்காய் உயிர;தந்தேன்
தளராதே மனமே தளராதே (2)
உன்னை நான் தேர்ந்து கொண்டேன் (2)

**22.**

**என்னைத் தேடி ஒரு தெய்வம்**
மண்ணில் மனிதனானதே
காணாமல் போன ஆடு நான்
பாவி என்னை அணைத்துக் கொண்டார்

இறங்கி வா சக்கேயுவே
இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்
அழைக்கின்றார் அழைக்கின்றார் அருகில் ஓடி வா

சமாரியாவின் விசுவாசியே
பொங்கியெழும் ஜீவத் தண்ணீர் பருகிடுவாய்
அழைக்கின்றார் அழைக்கின்றார் அருகில் ஓடி வா

வீணாக மார்த்தா கலங்குகின்றாய்
மரியாவே நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டாள்
கலங்காதே கலங்காதே அருகில் ஓடி வா

**23.**

**என்னில் எழுந்த யேசுவிற்கே**
ஆராதனை ஆராதனை (2)
நன்மைகள் செய்த இராஜாவிற்கே
நன்றி நன்றி நன்றிப் பலி (2) என்னில் எழுந்த.............

எம்மாவு ஊரிலே அப்பத்தை
உடைத்து கண்கள் திறந்தவரே
பார;வை வேண்டும் உம்மைப் பார்க்க
உயிருள்ள உந்தன் பலிதனிலே (2)
ஆராதனை ஆராதனை (2) (என்னில் எழுந்த .......

கானாவூரிலே தண்ணீரை எடுத்து
திராட்சை இரசமாக்கினீர்
குறையுள்ள என் வாழ்வை ஏற்பீரையா
சுவை உள்ள இரசமாய் மாற்றிடுவீர் (2)
ஆராதனை ஆராதனை (2)
(என்னில் எழுந்த .......)

**24.**

**கல்வாரி அன்ப்பிற்கு கைமாறாக**
கல்வாரி அன்பிற்கு கைமாறாக
கர்த்தாவே எதை நான் தரப்போகின்றேன்
கடின இதயமும் கசந்த பாவமும்
கர்த்தாவே கைமாறாக
திருப்பித் தருகின்றேன்
நான் திருப்பித் தருகின்றேன் (கல்வாரி ...

சிலுவையின் நிழலில் பாவியாய் நின்று
சிரசில் அழுத்தும் முட்கள் கண்டேன் (2)
அயலாரை வஞ்சிக்கும் வாழ்வையும்
அபகரித்து பொய் பேசும் நாவையும்
கைமாறாக நான் தருகின்றேன் (2)

சிலுவையின் நிழலில் பாவியாய் நின்று
சீறிப்பாயும் குருதி கண்டேன் (2)
உள்ளத்தில் மறைந்துள்ள பாவங்களும்
உலகத்தில் நாம் தேடும் சுகங்களும்
கைமாறாக நான் தருகின்றேன் (2)

**25 .**

**வல்லமை வல்லமை வல்லமை வல்லமை (2)**
ஆதியில் இருந்த வல்லமை
அனைத்தையும் படைத்த வல்லமை
அக்கினி பொழியும் வல்லமை
அனைத்தையும் புதிதாக்கும் வல்லமை (2)
புதிய வல்லமை, புனித வல்லமை,
மண்மீது இறங்கிய மகிமையின் வல்லமை
புதிய வல்லமை, புனித வல்லமை
என்மீது இறங்கிடும் பிதாவின் வல்லமை
வல்லமை வல்லமை வல்லமை வல்லமை (2)

வாருமே வாருமே யோர்தான் கரையில் வந்தது போல்
தங்கிடுமே தங்கிடுமே
தயங்கிய சீடரில் தங்கியது போல்
மாற்றிடுமே மாற்றிடுமே
மனிதனைப் பிடிக்கும் சீடனாக
காத்திடுமே காத்திடுமே கறைகள் கழுவி காத்திடுமே
புதிய வல்லமை, புனித வல்லமை,

மண்மீது இறங்கிய மகிமையின் வல்லமை
புதிய வல்லமை, புனித வல்லமை
என்மீது இறங்கிடும் பிதாவின் வல்லமை
வல்லமை வல்லமை வல்லமை வல்லமை (2)

தாருமே தாருமே பரிசுத்த வல்லமை தாருமே
பொழிந்திடுமே பொழிந்திடுமே பிளவுற்ற
நாவுகள் பொழிந்திடுமே
துணையாகுமே துணையாகுமே
தூய்மையின் வழிசெல்ல துணையாகுமே
வழிகாட்டுமே வழிகாட்டுமே உம் சித்தம்
நான் செய்ய வழிகாட்டுமே
புதிய வல்லமை, புனித வல்லமை,
மண்மீது இறங்கிய மகிமையின் வல்லமை
புதிய வல்லமை, புனித வல்லமை
என்மீது இறங்கிடும் பிதாவின் வல்லமை
வல்லமை வல்லமை வல்லமை வல்லமை (2)

**26.**

**எழுந்து நான் நடப்பேனே**
என் அப்பாவின் இல்லம் தேடி (2)
ஊதாரிப் பிள்ளையாய் வாழ்ந்தேன் ஐயா
ஓடி வந்து முத்தமிட்டு மார்போடு அணைந்து
மன்னிப்புத் தந்தீரையா (2) (எழுந்து நான் .....)

உலகாழும் செல்வங்கள் பெரிதென்று வாழ்ந்தேன்
உறவுகள் உடைமைகள்
உண்மையென்று அலைந்தேன் (2)
உள்ளம் தெளிந்தேன் உன்னை அறிந்தேன்
வாழ்வும் வழியும்
உண்மையும் நீயே (2) (எழுந்து நான் .....)

ஈசோப்பினால் என்னை கழுவிடும் தேவா
உறைபனியிலும் நான் வெண்மையாகிடுவேன் (2)
உள்ளம் தெளிந்தேன் உன்னை அறிந்தேன்
வாழ்வும் வழியும்
உண்மையும் நீயே (2) (எழுந்து நான் .....)

**27.**

**ஐயா உன் பிரசன்னம் அண்டிவந்தேன்**
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும் (2)

உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது
வாளினும் கூர்மையானது (2)
சிந்தனையை சீர் தூக்கி பார்க்க வல்லது (2)
உம் வார்த்தையே உம் வார்த்தையே (ஐயா உன்....)

விண்ணும் அழியலாம் மண்ணும் மறையலாம்
வாழ்வின் செல்வம் எல்லாம் அழியலாம் (2)
வான் மழை போல் பயன்-தராமல் திரும்புவதில்லை (2)
உம் வார்த்தையே உம் வார்த்தையே (ஐயா உன்....)

தெய்வீகமே மனுவுரு எடுத்தார;
என் வாழ்வில் குடிகொண்டாரே (2)
ஆன்மாவை அழியாமல் ஆட்கொள்ளுமே (2)
உம் வார்த்தையே உம் வார்த்தையே (ஐயா உன்....)

**28.**

**எம்மோடு தங்கும் ஆண்டவரே**
என்னோடு பேசும் என் யேசுவே (2)
அலைந்து திரியும் உலகினிலே
நான் தொலைந்து போகாமல் இருந்திடவே (2)
வாருமே வாருமே மாரா நாதா யேசுவே (2)

உம் சித்தம் போல் இந்த பூமியிலே
வாழ்வது கடினம் ஐயா
உந்தன் அருள் இருந்தால் எந்த
மலைகளையும் தாண்டிட சுலபமையா (2)
அலைந்து திரியும் உலகினிலே
நான் தொலைந்து போகாமல் இருந்திடவே (2)
வாருமே வாருமே மாரா நாதா யேசுவே (2)

எம்மாவு சீடரின் சோர்வினிலே வழித்துணையானவரே
எந்தன் பயணங்களில் வரும் இடர்களையும்
வென்றிட அருளும் ஐயா (2)
அலைந்து திரியும் உலகினிலே
நான் தொலைந்து போகாமல் இருந்திடவே (2)
வாருமே வாருமே மாரா நாதா யேசுவே (2)

**29.**

**எனக்காய் உயிர் தந்த தெய்வமே**
உந்தன் காயங்கள் காட்டுமையா
கல்லான என் நெஞ்சம் உருகிட வேண்டுமையா

மன்னியும் என்னை மன்னியும்
கல்வாரி அன்பே மன்னியும் (2)

எந்தன் பாவத்தின் முட்கள் பெருகியதால்
உந்தன் சிரசில் முள்முடி தைத்தேன் ஐயா (2)
எந்தன் பாதைகள் தவறிப் போனதால் (2)
நீர் கல்வாரிப் பாடுகள் எனக்காய் சுமந்தீர் ஐயா
(மன்னியும் என்னை ........)

ஒரு நண்பனுக்காய் உயிர; தரும் உயர்ந்த அன்பை
உந்தன் சிலுவையின் பாதையில் உணந்தேன் ஐயா (2)
தெய்வ சாயலில் என்னை மாற்றவே (2)
நீர் கல்வாரிப் பாடுகள் எனக்காய் சுமந்தீர் ஐயா
(மன்னியும் என்னை ........)

.
30.

**மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை**
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும் மறைந்து முடிவு பெறுக
புதிய நியம முறைகள் வருக புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின் உதவி பெறுக
பிதா அவர்க்கும் சுதன் இவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றியார்ப்பும்
மீட்பின் பெருமை மகிமையோடு
வலிமை வாழ்த்து யாவும் ஆக
இருவரிடமாய் வருகின்றவராம் தூய
ஆவியானவர்க்கும்
அளவில்லாத சம புகழ்ச்சி என்றுமே உண்டாகுக.
ஆமென்

31.

**அன்பின் தேவநற்கருணையிலே**

அழியாப் புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையில் வழிநடந்தே
அடியோர் வாழ்ந்திடத் துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்பரச குணத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீ ஆட்கொண்டீர்

கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலை நிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில்
நம்பிக்கையூட்டி வளத்திடுவீர்
இளமையின் பொழிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழத் தயை புரிவீர்

32.

**அருள் திரு தேவ தேவன் போற்றி**

அவர் தம் திரு நாமம் போற்றி
அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி
அவர் தம் திரு அன்பே போற்றி
அருள் நிறை தூய ஆவி போற்றி
அவர் தம் திரு ஞானம் போற்றி
அருள் நிறை அன்னை மரியாள் போற்றி
அவர் தம் திரு தூய்மை போற்றி
அருள் நிறை தூசை முனியும் போற்றி
அவர் தம் திரு வாய்மை போற்றி
அருள் நிறை தூதர் அமரர் போற்றி
அவர் தம் திரு சேவை போற்றி
அருள் திரு தேவ தேவன் போற்றி
அவர் தம் திரு நாமம் போற்றி

33.

**ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே**

ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா (2)
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே - 2
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும் - 2

கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே (2)
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் -2
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே -2

ஜீவத்தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே (2)
கனிதந்திட நான் செழித்தோங்கிட -2
கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம்பெற்றிட -2

இரட்சிப்பின் ஊற்றுகள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே (2)
ஆத்ம பாரமும் பரிசுத்தமும் -2
ஆவலுடன் பெற்றிட வரம் தாருமே -2

34.

**உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக**

உலகினிலே நல் மனத்தவர்க்கு அமைதியும் உண்டாக
புகழ்கின்றோம் யாம் உம்மையே வாழ்த்துகின்றோம்
இறைவனே
உமக்கு ஆராதனை புரிந்து உம்மை
மகிமைப் படுத்துகின்றோம் யாம்
உமது மேலாம் மாட்சிமைக்காக உமக்கு நன்றி
நவில்கின்றோம்
ஆண்டவராம் எம் இறைவனே இணையில்லாத
விண்ணரசே
ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும்
தேவ தந்தை இறைவனே
ஏகமகனாக செனித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து
இறைவனே
ஆண்டவராம் எம் இறைவனே இறைவனின் திருச்
செம்மறியே
தந்தையினின்று நித்தியமாக செனித்த இறைவன் மகனே
நீர்
உலகின் பாவம் போக்குபவரே நீர் எம்மீது இரங்குவீர்
உலகின் பாவம் போக்குபவரே எம் மன்றாட்டை
ஏற்றருள்வீர்
தந்தையின் வலத்தில் வீற்றிருப்பவரே நீர் எம்மீது
இரங்குவீர்
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே நீர் ஒருவரே தூயவர்
நீர் ஒருவரே ஆண்டவர் நீர் ஒருவரே உன்னதர்
பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின்
மாட்சியில் உள்ளவர் நீரே – ஆமென்

35.

**வானமும் பூமியும் படைத்தவராம்**

கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை மகன் தூய ஆவியராய்
ஒன்றாய் வாழ்வதை நம்புகின்றோம்

பரிசுத்த ஆவியின் வல்லமையால்
இறைமகன் நமக்காய் மனுவானார்
கன்னி மரியிடம் பிறந்தவராம்
இயேசுவை உறுதியாய் நம்புகிறோம்

பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
சிலுவையில் மரித்து அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
மரணத்தின் மீது வெற்றி கொண்டார்

பரலோகம் வாழும் தந்தையிடம்
அரியணை கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்திலே
நடுவராய்த் திரும்பவும் வந்திடுவார்

பரிசுத்த ஆவியை நம்புகிறோம்
பாரினில் அவர் துணை வேண்டிடுவோம்
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்று
பரிகார வாழ்வில் நிலைத்திடுவோம்

திருச்சபை உரைப்பதை நம்புகிறோம்
புனிதர்கள் உறவை நம்புகிறோம்
உடலின் உயிர்ப்பை நிலைவாழ்வை
விசுவாசப் பொருளாய் நம்புகிறோம். ஆமென்.